திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த சுஜாதா பருத்தி அதிகமான மகசூலைத் தருகிறது என்ற காரணத்தால் விவசாயிகள் சுஜாதா பருத்தியை மிக அதிகமாகப்போடுகிறார்கள். ஆனால் குறைந்தது பூச்சி கொல்லி மருந்துக்காக 50 சதவீதம் சப்சிடி கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் 33 சதவீதம் கூட கொடுக்காமல் இருப்பதால் விவசாயிகள் அதிகப்படியான விலை கொடுத்து அதை வாங்கவேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் பருத்தியின் விலையும் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, இந்த நிலைமையைப் பரிசீலனை செய்து, அரசாங்கம் அதற்கு அதிகப்படியான விலையைக் கொடுப்பதற்கும், பெர்டிலைசருக்காக 33 சதவீதம் சப்சிடி கொடுப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, செவின் கோயம்புத்தூர் மாவட்டத்திற்குத் தேவைப்படுகிறது. உள்நாட்டு செவின்தான் கொடுக்கமுடியும். வெளிநாட்டு செவின் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டு விட்டுச்சென்று இருக்கிறார்கள். மறுபடியும் அவர்கள் வந்ததற்குப்பிறகு இதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நாட்டுக்கு பருத்தி பற்றாக்குறை இருக்கிறது. அதைத் தீர்க்கும் முறையில் இந்த சுஜாதா பருத்தியை பயிரிட்டால் நன்றாக இருக்கும். இதற்குத் தேவைப்படும் செவின், மற்றும் காம்போனென்ட்ஸ் கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் தேவைப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா, ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதல்வர் அவர்கள் வந்ததற்குப் பிறகு சொல்லலாம் என்று சொன்னேன். முதல்வர் அவர்கள் வந்துவிட்டார்கள். அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

Cold Storage Unit for Hosur Taluk.

* 119 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to construct a cold storage unit for storing potatoes and vegetables in Hosur Taluk in Dharmapuri district; and

(b) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Thiru B. VENKATASWAMY : Sir, we are importing potatoes from Simla to the tune of three to four lakhs of rupees per year by paying abnormal rates. If we construct a cold storage

unit at Hosur, we can save money and also stop the import of potatoes from Simla. So, will the Government come forward to start a cold storage unit in the Hosur taluk?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கெனவே இப்போது நீலகிரியில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. சென்னையில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

விமான மூலம் பூச்சி மருந்து தெளித்தல்

** 120 வினா—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூச்சி மருந்து தெளிக்கும் விமானப் பிரிவு ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) பூச்சி மருந்து தெளிக்கும் பணிக்காக இரண்டு ஹெலிகாப்டர்கள் வாங்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. செலவினங்கள் மற்றும் இதர விவரங்கள் வேளாண்மைத்துறை இயக்குநரால் ஆராயப் பட்டு வருகின்றன.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், இந்த பூச்சி மருந்து தெளிப்பதற்குத் தற்போது நாம் வாடகை விமானங்களை அமர்த்து கிறோம். ஒரு ஏக்கருக்கு தெளிப்பதற்கு எவ்வளவு வாடகை கொடுக்கிறோம் என்பதை அரசு தெரிவிக்குமா ? அது மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் மருந்து தெளிப்பதற்கு என்று ஹெலிகாப்டர் வரவழைக்கப்பட்டது. அது பழுதாகிவிட்ட காரணத்தால் அதை அங்கே உபயோகப்படுத்த முடியவில்லை. அது பற்றிய விவரம் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்த ஹெலிகாப்டர் பழுதாகிவிட்ட காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மீண்டும் மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : ஒரு ஏக்கருக்கு எவ்வளவு என்றும் கேட்டேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ. 11.30 காசுகள்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹெலிகாப்டர் பழுது அடைந்துபோய் மருந்து தெளிக்கப்படவில்லை. அதே நேரத்தில் விவசாயிகளிடமிருந்து